# கொழும்பு நகர புத்துயிராக்கல் செயல்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் - AIIB - வெற்றிட அறிவித்தல்

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம்

## போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

**வெற்றிடங்கள் – கொழும்பு நகர புத்துயிராக்கல் செயல்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் – AIIB**

நகர அபிவிருத்திப் பிராந்தியத்திற்குள் முன்னுரிமை முதலீடான நகர்புர புத்துயிராக்கல் திட்டத்தின் கீழ் கொழும்பு நகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் சுமார் 4,074 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கும் மற்றும் காணிகளை மீளபிவிருத்தி செய்வதற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து (AIIB) 158 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது.

இந்தத் திட்டம் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்றது.

கொழும்பு நகர புத்துயிராக்கல் செயல்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் திட்டத்தின் கீழ் உள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| திட்டப் பெறுமதி - 25 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்டவை மற்றும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குறையாதவை | | | |
|---|---|---|---|
| **தொ. இல.** | **பதவி** | **வெற்றிடங்கள்** | **01/2026 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பள வகுதி** |
| 1. | திட்டப் பணிப்பாளர் | 1 | A |
| 2. | மேலதிக திட்டப் பணிப்பாளர் (பெறுகை) | 1 | D |
| 3. | பொறியியலாளர் (சிவில்) | 2 | D |
| 4. | திட்டமிடல் உதவியாளர் | 1 | F |
| 5. | தொழில்நுட்ப அதிகாரி | 1 | F |
| 6. | உதவி சமூகவியலாளர் | 1 | F |
| 7. | கணனி இயக்குநர் | 1 | ஒத்துழைப்பு பணியாளர் |
| 8. | அலுவலக உதவியாளர் | 1 | |

சம்பள வகுதிகள் 01-2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் உள்ளன.

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

- சம்பளம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், காலத்திற்குக் காலம் திருத்தப்படுவதன் பிரகாரம் 2026-02-02ஆம் திகதிய 01-2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் இருக்கும்.
- நியமனம் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இருக்கும், திருப்திகரமான செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு திட்டம் வரை நீட்டிக்கப்படும்.
- வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள் மற்றும் உயரமான நிர்மாணத் திட்டங்களில் உள்ள அனுபவம் மேலதிக நன்மையாக இருக்கும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

- பரிந்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் விபரமான அறிவித்தலைப் பெற்றுக்கொள்ள www.transport.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.
- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சுய தரவுகள், தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்றுபகர்வோரின் பெயர் மற்றும் தொடர்பு விபரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு 2026 மார்ச் 01ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**மேலதிக செயலாளர் (திட்டங்கள்),**
**போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,**
**6ஆம் மாடி, செத்சிறிபாய - 2ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல,**

**முக்கியமானவை:**

- கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- அரசாங்கத் துறையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை குறித்த திணைக்களத்தின் தலைமையினூடாக சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத் திகதியில் தேவையான தகைமைகளைக் கொண்டிராத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் முடிவுறுத்தல் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- குறும்பட்டியலிடப்பட்ட அபேட்சகர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

**செயலாளர்,**
**போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.**